(ஈ). திரு. கியானி ஜெயில்சிங், இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் திரு. கியானி ஜெயில் சிங் அவர்கள் தனது 79-வது வயதில் 25-12-1994 அன்று மறைவுற்றது இப்பேரவைக்குப் பெரும் துயரத்தை அளிக்கிறது. அவர் 1916-ஆம் ஆண்டு, மே திங்கள், 5-ஆம் நாளன்று பஞ்சாப் மாநிலம், பரித்கோட் மாவட்டத்தில் சந்த்வான் என்னும் இடத்தில் பிறந்தார். மிக எளிய குடும்பத்தில் பிறந்த இந்தியக் குடிமகன் ஒருவரும் குடியரசுத் தலைவர் ஆகலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவராவார். சுதந்திரப் போராட்ட வேள்வியில் பஞ்சாப் மாநிலத்தில் பல்வேறு நிலைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் என்பது நினைவுகூறத்தக்க ஒன்றாகும். அவர் 1951-ஆம் ஆண்டு முதல் 1952-ஆம் ஆண்டு வரை பஞ்சாப் மாநிலத்தின் பொதுப்பணித்துறை மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சராகத் திகழ்ந்தார். 1956-ஆம் ஆண்டு முதல் 1957-ஆம் ஆண்டு வரை மாநிலங்கள் அவையின் உறுப்பினராக விளங்கினார். 1962-ஆம் ஆண்டு பஞ்சாப் சட்டமன்றப் பேரவை உறுப்பினராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு. பிரதாப் சிங் கைரோன் அமைச்சரவையில் துணை அமைச்சராக விளங்கிய அவர். பின்னர் பதவி விலகினார். 1972-ஆம் ஆண்டு அவர் பஞ்சாப் மாநில முதலமைச்சரானார். 1980-ஆம் ஆண்டு முதல் 1982-ஆம் ஆண்டு வரை மத்திய அமைச்சரவையில் உள்துறை அமைச்சராக விளங்கினார். 1982-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் இந்தியக் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்று, 1987-ஆம் ஆண்டு வரை அப்பதவியைத் தொடர்ந்து வகித்து வந்தார். இந்தியத் துணைக் கண்டத்தின் போற்றற்குரிய மைந்தரான அவர், தன்னுடைய நுண்ணறிவாற்றலாலும், செயலாற்றலினாலும் நகைச்சுவை உணர்வினாலும் எந்தச் சமூக நிகழ்ச்சியிலும் முதன்மையாக இருந்தவர் ஆவார். இந்திய மண்ணின் ஒருமைப்பாட்டுக்கு எதிரான எத்தகைய சிறு சம்பவம் கூட நிகழ்ந்திடலாகாது என்பதில் கண்ணுங் கருத்துமாகத் தன் வாழ்நாள் முழுமையும் திகழ்ந்தவர் ஆவார். அவர் தனது 79-வது வயதில் 25-12-1994 அன்று மறைவுற்ற செய்தி, இப்பேரவைக்குப் பெரும் துயரத்தை அளிக்கிறது.

முற்பகல் 10-15

அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு, இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள்

அனைவரும் எழுந்து, இரண்டு நிமிடங்கள் அமைதியாக நிற்கக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், பேரவையின் அலுவல்கள் இப்போது ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் முற்பகல் 11.15 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10.17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் முற்பகல் 11.15 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

3. வினாக்கள் — விடைகள்

உடுக்குறியிடாத வினாக்கள்

(*பட்டியல்கள் 1 முதல் 8 வரை)

முதல் பட்டியல்

1—

மழவேனிற்காடு சாலையை தார்ச்சாலையாக மாற்றுதல்

வினா எண் 565-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மழவேனிற்காடு கிராம ஆதிதிராவிடர் சாலையை தார்ச் சாலையாக மாற்றிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை வட்டம், மழவேனிற்காடு கிராம ஆதிதிராவிடர் சாலையை தார்ச்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

---

* இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS